**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.212/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | சித்ரா |
| Father's Name/Husband Name: | ராஜேந்திரன் |
| Village : | நக்கசேலம் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 1, 2, 4, 5 ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது நக்கசேலம் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு இரவு 8 மணியளவில் எனது மகள் பிரியா என்பவரிடம் எதிரிகள் சத்தம் போடுவதாக சொன்னார்கள். அதை கேட்டு அ.சா.1ம் மற்றும் நானும் எனது உறவினர்ளும் சென்று எதிரியிடம் சத்தம் போட்டுக் கொண்டு பேசியபோது கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் இருந்த யாரோ சிலர் அ.சா.1 கீழே தள்ளிவிட்டு அடித்துவிட்டார்கள். கூட்டத்தில் எதிரிகள் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் அ.சா.1 புகார் கொடுத்துவிட்டார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய உறவினரான ராஜேந்திரன் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவரை பார்ப்பதற்காக நானும் பட்டியல் சாட்சிகள்1 முதல் 5 வரை உள்ளவர்கள் அனைவரும் அவரை பார்ப்பதற்காக சென்றிருந்தோம் என்றால் சரிதான். 16.02.2020ம் தேதி இரவு 8 மணியளவில் பிரியா கடைக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது 1ம் எதிரி பிரியாவை கெட்ட வார்த்தையால் திட்டி அடித்ததாகவும் அதைக் கேட்ட என்னை 1ம் எதிரி சேலையை பிடித்து அடித்ததாகவும், தடுக்கச் சென்ற அ.சா.1யை ராஜேந்திரன், மணிகண்டன், இரும்புதுரை, காளிமுத்து ஆகியோர்களை 1 முதல் 5 வரையிலான எதிரிகள் அனைவரும் கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றால் சரியல்ல.

1ம் எதிரி அ.சா.1யை காலால் உதைத்ததாகவும், சாட்சி ராஜேந்திரனை 1ம் எதிரி காலால் இடது பக்க காது பக்க தோள்பட்டை இடது முழங்கால் ஆகிய இடங்களில் குத்தியதாகவும், சாட்சி இரும்புதுரையை 3ம் எதிரி வலது விலா, வலது நடுவிரலில் கல்லால் குத்தியதாகவும், சாட்சி கலியமுத்துவை 4 மற்றும் 5ம் எதிரி முடியை பிடித்து இழுத்து கண்ணத்தில் அடித்தும் அவர் வைத்திருந்த ஆயுதங்களை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எதிரிகளும் தற்போது சமாதானமாக சென்றுவிட்டோம் என்றால் சரிதான். அதனால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.